# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under Ministry of Education, Government of India)

40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113

Website : www.cict.in


## பயிலரங்கம் – 6

## மொழிபெயர்ப்பியல் புலம்

## உலக மொழிகளில் தமிழ்ச் செவ்விலக்கியங்களின் பெயர்ப்பும் தாக்கமும்

(The Influence and Translation of Ancient Tamil Classics in World Languages)

(24.09.2021 முதல் 30.09.2021 வரை)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தேர்ந்தெடுத்துக்கொண்டுள்ள 41 செவ்விலக்கியங்கள் தமிழினம் உலகிற்கு அளித்த பெருங்கொடையென்று சொல்ல வேண்டும். அவற்றுள் பல வடமொழி உள்ளிட்ட இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்தை முதலாகக் கொண்ட உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அம்மொழிபெயர்ப்புகளின் தன்மையையும் தரத்தையும் எடையிட்டு அறிவிக்க வேண்டியது தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அறிஞர்களின் கடமையும் உரிமையும் ஆகும். எனவே இப்பயிலரங்க உரைகள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்குத் தொகுதிகளில் உள்ள நூல்களையும் தொல்காப்பியம், இறையனார் களவியல், சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம் ஆகிய நூல்களையும் போப் அடிகளார், எல்லீசர், ஜார்ஜ் ஹார்ட், ஏ.கே. இராமானுஜன் போன்ற அறிஞர்களால் எவ்வாறெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன என்பதையும், அவற்றின் சிறப்புகளையும், மேலும் மொழிபெயர்ப்பில் காணலாகும் குறைபாடுகளையும் ஆராயும் நோக்கில் அமையும்.

இச்செவ்விலக்கியங்கள் மூல நூல்களாகவும் மொழிபெயர்ப்புகளாகவும் எபிரேயம், இலத்தீன், வடமொழி, இத்தாலிய, ருசிய, பிரெஞ்சு, ஆங்கில மொழி இலக்கியங்களில் ஏற்படுத்தியுள்ள தாக்கமும், பெற்றுள்ள செல்வாக்கும் அவற்றின் உயர்வைப் புலப்படுத்தும். எனவே அப்பணிகள் குறித்து நமது இளந்தலைமுறையினர் அறிந்து செயல்படுவது தமிழுக்கு அவர்கள் செய்ய வேண்டிய பணியாகும்.

இவ் இரண்டு நோக்கங்களைக் கருத்தில் கொண்டு இப்பயிலரங்கம் செயல்படும். ஆய்வு மாணவர்கள் மட்டும் இதில் கலந்து கொள்ளலாம்.

மொழிபெயர்ப்புத் துறையின் சிறந்த அறிஞர் பெருமக்கள் இப்பயிலரங்கில் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் கீழ் வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 20.

2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 24.09.2021 முதல் 30.09.2021 வரை (தொடர்ந்து 7 நாள்கள்).
3. பயிலரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து 15-09-2021 க்குள் workshopt@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக் கூடாது.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் ஆணை அனுப்பி வைக்கப்படும்.
11. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு16-09-2021 அன்று மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ,சென்னை

உலக மொழிகளில் தமிழ்ச் செவ்விலக்கியங்களின் பெயர்ப்பும் தாக்கமும்

(The Influence and Translation of Ancient Tamil Classics in World Languages)

**(24-09-2021 – 30-09-2021)**

### விண்ணப்பப் படிவம்

நிழற்படம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பயிலும் கல்லூரி/ பல்கலைக்கழகம் | | |
| 3. | பிறந்த நாள்/வயது | | |
| 4. | வகுப்பு (✓ செய்க) | | பொது ☐ இ.பி.வ. ☐ பட்டியல் இனத்தவர் ☐ |
| 5. | கல்வித் தகுதிகள் | | |
| 6. | கல்லூரி முகவரி (தொலைபேசி/மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 7. | இல்ல முகவரி தொலைபேசி/மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 8. | புலன எண் | | |
| 9. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | |

நாள் :

இடம்:

(கையொப்பம்)

உரிய முத்திரையுடன்

நெறியாளர்/முதல்வர்/பதிவாளரின் கையொப்பம்